வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.3865/ஆ4/2023 நாள் .15.12.2023

பொருள் : தேர்வுகள் –வேலூர் மாவட்டம் –2023–2024 ஆம் கல்வியாண்டிற்கான பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத்தேர்வுகள்– பள்ளி மாணவர்கள் பெயர்ப் பட்டியல் –EMIS விவரங்களின் அடிப்படையில் தயாரித்தல் –மாணவர்கள் விவரங்களை பதிவேற்றம் செய்தல் மற்றும் தேர்வுக்கட்டணம் செலுத்துதல் குறித்து அறிவுரைகள் மற்றும் மாற்றுத்திறனாளி மானவர்களின் சலுகைகள் கோரும் தேர்வர்கள் விவரம் –கோருதல் –சார்பு

பார்வை : அரசுத் தேர்வுகள் இயக்குநரின் செய்லமுறைகள் ந.க.எண்.016387/ எப்1/2023 நாள் 14.12.2023

==============

பார்வையில் காணும் அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின் படி, வேலூர் மாவட்டம், 2023–2024 ஆம் கல்வியாண்டிற்கான பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்வுகளுக்கான பெயர்பட்டியல் தயாரிப்பதற்கு இணைப்பில் காணும் அரசுத் தேர்வுத் துறை இயக்குநரின் கடிதத்தில் தெரிவிதுள்ள வழிமுறைகளின் பின்பற்றி செயல்படுமாறு அனைத்து வகை உயர்/மேல்நிலை தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் தேர்வெழுத சலுகை கோரும் மாற்றுத் திறனாளிகளின் விவரம் இத்துடன் இணைக்கபட்டுள்ள விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து , மாற்றுதிறனாளிகளின் அடையாள அட்டை நகல் அல்லது மருத்துவக் குழுவின் பரிந்துரை கடிதம், இரண்டு நகல்களில் 26.12.2023–க்குள் பத்தாம் வகுப்பு மற்றும் பதினோராம் வகுப்பு சலுகைகள் கோரும் விண்ணபத்தினை வேலூர் அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் சமர்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

- பத்தாம் வகுப்பு மற்றும் பதினோராம் வகுப்பு மாணவர்கள் அரசுத் தேர்வுகள் இயக்கக இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்ய 15.12.2023 (வெள்ளிக்கிழமை) பிற்பகல் 12.00 மணி முதல் 29.12.2023 (வெள்ளிக்கிழமை ) வரை
- 2023 –2024 ஆம் கல்வியாண்டிற்கான TML கட்டணம் 29.12.2023 –க்குள் இக்கட்டணத்தினை செலுத்த வேண்டும்.

வேலூர் மாவட்டத்திற்கு இப்பணி தொடர்பான ஒருங்கிணைப்பாளர் (co –coordinator) தொடர்பு கொள்ளலாம்

1. திரு. G.கோபி, கணினி பயிற்றுநர் – 70920 29001
2. திரு. ஜெ.சுந்தர்,கணினி பயிற்றுநர்– 8838905201

இணைப்பு:

1. பார்வை கடித நகல்
2. தேர்வெழுத சலுகை கோரும் படிவம்1
3. மாற்றுத்திறனாளித் தேர்வார்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் குறித்த அரசாணை

//ஓம்.செ.மணிமொழி//
முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்

பெறுநர்,
அனைத்து வகை உயர்,மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் ,வே.மா.

நகல்,
வேலூர் மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலை/தனியார்) தொடர்நாடவடிக்கையின் பொருட்டு அனுப்பலாகிறது.